DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous C.C.**No.174/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயராஜ் (P.w.1) |
| Father/Husband Name | : | முத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day January of 2024

( 1வது எதிரி ஆஜர் . 2முதல் 4 வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2 முதல் 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது களத்தூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அவர்கள் உறவினர்கள். கடந்த 18.06.2023ம் தேதியன்று காலை 8 மணிக்கு ராஜசேகர் மற்றும் தவமுத்து ரோட்டில் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். களத்தூர் விஏஓ அலுவலகம் அருகே டீ கடை உள்ளது. நான் எதார்த்தமாக டீ சாப்பிட வந்தபோது நடராஜன் வீட்டில் இருந்த கம்பியை எடுத்து வந்து நீ ராஜசேகருக்காக வக்காலத்து வாங்கி வருகிறாய் என்று சொல்லி என் முதுகில் அடித்துவிட்டார். முத்துச்செல்வம் என்பவர் கம்பை எடுத்து வந்து முதுகில் அடித்துவிட்டார். அன்புசெல்வன் கம்பை வைத்து வலது கையில் அடித்துவிட்டார். சகுந்தலதேவி கல்லை வைத்து

முதுகில் எறிந்துவிட்டார். நடராஜன் மகன் செல்வமுத்து என்பவர் ஓடி வந்து கம்பை வைத்து முதுகில் அடித்துவிட்டார். எனது பங்காளி ராஜகேசரும் எனது மகன் வினோத்குமாரும் ஓடி வந்துவிலக்கிவிட்டார்கள் . அவர்கள் விலக்கி விடும் போதும் விலக்கிவிட ஆள் வந்துவிட்டார்கள் இல்லாவிட்டால் கம்பை வைத்து உன்னை கொன்றுபோட்டிருப்பேன் என்று மிரட்டினார்.

2. பின்னர் நான் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருக்கும்போது முக்குளம் போலிசார் வந்து விசாரணை செய்து என்னிடம் புகார் மனு பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் உள்ள சரத்துக்கள் எனக்கு தெரியும்.(**அந்த புகார் மனு அதசாஆ1 ஆக குறீயிடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி :-

3. சாட்சி வினோத்குமார் எனது மகன் . ராஜசேகர் எனது பங்காளி. தவமுத்து பங்காளி. நாகராஜ் எனது பங்காளி. சூரியா எனது உறவினர் வேறு ஊரைச் சேர்ந்தவர். சம்பவ இடம் விஏஓ அலுவலகம் அருகே உள்ள டீ கடை என்றால் சரிதான். டீ கடையில் 2, 3 பேர் இருந்தார்கள் அவர்கள் தான் விலக்கிவிட்டார்கள். டீ கடையின் உரிமையாளர் முத்துக்குமாரை விசாரித்தால் நடந்த உண்மை தெரிய வரும் என்றால் சரிதான். களத்தூரில் இருந்து முக்குளம் காவல் நிலையம் 6 கிமீ தூரம் இருக்கும். முக்குளம் காவல் நிலையம் ரோட்டின் மேலே உள்ளது என்றால் சரிதான். முக்குளம் காவல் நிலையத்திற்கு அடுத்தாற்போல் சுகாதார நிலையம் உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு முக்குளம் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். நான் நேரடியாக திருச்சுழி அரசு மருத்துவமனை சென்று விட்டேன். சம்பவ நடந்தவுடன் முக்குளம் சுகாதார நிலையம் சென்று முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை. களத்தூரில் இருந்து திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு எனது மகனுடன் பைக்கில் வந்தேன். திருச்சுழி அரசு

மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்று சரியாக ஞாபகம் இல்லை. புகார் மனுவை மருத்துவமனையில் வைத்து எழுதினேன். நான் தான் எழுதினேன். நான் கொடுத்த புகார் மனுவில் முத்துசெல்வம் கட்டையால் அடித்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து வீட்டிற்கு செல்லவில்லை நேரடியாக மருத்துவமனை சென்றேன். எதிரிகள் மிரட்டியதால் பயம் ஏற்பட்டு பாதுகாப்பு கேட்டு மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் சம்பவம் நடந்தவுடனே விசாரித்துவிட்டார்கள். சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் எதிரிகள் என்னை அடித்து காயப்படுத்தவில்லை என்றாலும் எதிரிகள் என்னை மிரட்டவில்லை என்றாலும் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சாமி கும்பிடுவது தொடர்பாக பிரச்சனை முன்னிறுத்தி பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

4.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.